பக்கங்கள் 16+5

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 08 புதன்கிழமை 24.07.2024 அதிர்வு 359

## ஐஸ் போதைப்பொருளுடன் கைதான மூவரிடம் விசாரணை

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட 3 சந்தேகநபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக கல்முனை விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

04 ▶

### பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்ற

# தேசபந்து தென்னக்கோனுக்கு இடைக்காலத் தடை விதிப்பு!





### உயர்நீதிமன்றம் அதிரடி உத்தரவு

**தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றுவதைத் தடுத்து உயர்நீதிமன்றத்தால் இன்று இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

**உயர்நீதிமன்ற நீதியரசர் குழாம் இந்த ஆணையைப் பிறப்பித்தது. தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமைக்கு எதிராக**

04 ▶

# ரிவோல்வர் ரக துப்பாக்கி மீட்கப்பட்டு கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(பாறுக் ஷிஹான்)


கடற்கரையில் பிளாஸ்டிக் குழாய் ஒன்றில் கிறீஸ் திரவம் இட்டு புதைத்து வைக்கப்பட்டிருந்த ரிவோல்வர் ரக துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டு கல்முனை தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம், கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமாங்க பிள்ளையார் ஆலயத்தை அண்டிய கடற்கரைப் பகுதியில் கடலரிப்பால் வெளியாகியுள்ள நிலையில் அங்கு விளையாட்டில் ஈடுபட்டவர்களால் கண்டெடுக்கப்பட்டு குறித்த

04 ▶









# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் அகிலன் சாட்சியங்களை முன்னிலைப்படுத்தலாம்



### மேன்முறையீட்டு நீதிமன்றம் இன்று அனுமதி

இலங்கைத் தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கையொட்டி "புதிய சுதந்திரன்" மின் நாளிதழின் வெளியீட்டாளர் அகிலன் முத்துக்குமாரசுவாமிக்கு எதிராக மூல வழக்கின் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தொடுத்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், எதிர்த் தரப்பான அகிலன் சார்பில் சாட்சியங்கள், சாட்சியாளர்கள் ஏதும் இருப்பின் அதனை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த அனுமதி

04 ▶





# பாசிக்குடா நீலக் கொடிக் கடற்கரை வேலைத்திட்ட கலந்துரையாடல்!

(பழுவூரான்)

பாசிக்குடா நீலக் கொடிக் கடற்கரை வேலைத் திட்டம் தொடர்பான மட்டக்களப்பு மாவட்ட கடற்கரை முகாமைத்துவக் குழுவின் மூன்றாவது கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை (23) மட்டக்களப்பில் இடம்பெற்றது.

பாசிக்குடாக் கடற்கரையை நீலக் கொடிக் கடற்கரையாகத் தரமுயர்த்தும் வேலைத் திட்டம் தொடர்பாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடல் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது குறித்த திட்டத்தின் தேசிய இணைப்பாளர் சந்துன் விக்ரமசிங்க நீலக் கொடிக் கடற்கரை வேலைத் திட்டம் தொடர்பான அறிமுகத்தை வழங்கினார்.

சுற்றுலாத்துறை அமைச்சின் அனுசரணையில் மேற்கொள் ளப்படவுள்ள இந்தத் திட்டததுக்காக அருகம்பே மற்றும் பாசிக்குடா ஆகிய இரு கடற்கரைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நீலக் கொடிக் கடற்கரைக்கான தரச் சான்றிதழ் டென்மார்க் நாட்டில் அமைந்துள்ள சுற்றாடல் கல்விக்கான மன்றம் எனும் சர்வதேச நிறுவனத்தால் சுற்றாடல் கல்வி மற்றும் தகவல், தரமான நீர், சுற்றாடல் முகாமைத்துவம், பாதுகாப்பு மற்றும் சேவை ஆகிய பிரதான நான்கு காரணிகளுடன் காணப்படும் கடற்கரைகளுக்கு வழங்கப்படுகின்றது.

இதற்காகப் பாசிக்குடாக் கடற்கரையில் தகவல் நிலையம் அமைத்தல், அறிவித்தல் பலகைகளைப் பொருத்துதல், கடற்கரைப் பயனாளிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல், கடற்கரை நீரின் தரம் தொடர்பாக டிஜிட்டல் அறிவித்தல் பலகை அமைத்தல், சுகாதார வசதிகள், கழிவகற்றல் சேவைகளை பராமரித்தலும் தரமானதாகப் பேணுதலும் மற்றும் மீள்சுழற்சிக் கழிவுகளை சேகரித்தலும் அதனை ஒப்படைத்தலும், போன்ற செயற்பாடுகளைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கல்குடா பிரதேச சபை ஆகியவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களான ஆர்.ஜதிஸ்குமார், ரி.நிர்மலன், சுற்றுலாத்துறை அமைச்சின் மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.ஏ.விவேகாநந்தராஜ், வட கிழக்கு மாகாணங்களுக்கான உதவி முகாமையாளர் எஸ். சிவகுமார், கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அதிகாரி ஆசிபா, இலங்கை கடற்படை, பொலிஸ் மற்றும் அரச திணைக்களங்கள் பலவற்றின் அதிகாரிகள்எனப்பலர் கலந்துகொண்டனர்.







# கோட்டாவை விரட்டியவர்களும் ஜனாதிபதித் தேர்தல் களத்தில்




(எஸ்.நிதர்ஷன்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடித்த அரகலய அமைப்பினர் இணைந்து மக்கள் போராட்ட முன்னணி என்ற புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கட்சியினர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனித்து தமது கட்சி சார்பில் வேட்பாளரை நிறுத்த உள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போது இந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டை ஆட்சி செய்து வந்த ஆட்சியாளர்கள் சரியான முறையில் ஆட்சி செய்யவில்லை. அதனாலேயே நாடு அதாளபாதாளத்துக்குச் சென்றுள்ளது.

ஆகவே, நாட்டை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு எல்லோரிடத்திலும் உள்ளது. ஆனால், இந்த ஆட்சியாளர்களுடன் சேர்ந்து அதனைச் செய்வதில் பயனில்லை.

ஆகையினால் இன, மத மொழி பேதம் கடந்து அனைவருக்காகவும் குரல் கொடுக்கின்ற ஒரு அமைப்பாக மக்கள் போராட்ட முன்னணி என்ற அமைப்பை உருவாக்கியுள்ளோம். அதிலும் தமிழ் மக்களுக்குச் சுயாட்சி அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதே எங்களது நிலைப்பாடாகும்.

ஆகையினால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதனூடாக அனைவரும் வெற்றியடைய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றனர்.





# திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயத்தில் வனவாச நிகழ்வுகள்!

(பழுவூரான்)

திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலய வனவாச நிகழ்வு இன்று புதன்கிழமை (24) ஆலய வளாகத்தில் அமைந்துள்ள வாள் மாற்றும் அரங்கில் இடம்பெற்றது.

இதனைக் காண மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் நூற்றுக் கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆலய உற்சவம் மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டு ஏழு நாள்கள் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த நிலையில் இவ்வாலய உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை (19) திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (26) தீக்குளிர்த்தி வைபவத்துடன் நிறைவு பெறவுள்ளது.

# முல்லைத்தீவு துப்பாக்கிச்சூட்டில் விவசாயி காயம்!

முல்லைத்தீவு, கல்விளான் பகுதியில் இன்று புதன்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் விவசாயி ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கல்விளான் பகுதி விவசாய அமைப்பின் செயலாளரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இவர் வயலுக்குச் சென்றிருந்தபோது இனந்தெரியாத நபர்கள் சிலரால் இந்தத் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காயமடைந்தவர் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகக் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு, கல்விளான் பகுதியில் மணல் கடத்தல்காரர்களுக்குக் கடும் எதிர்ப்பு நிலவி வருவதால் இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துக்கும் மணல் கடத்தல்காரர்களுக்கும் இடையில் தொடர்பு இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எவ்வாறாயினும், துப்பாக்கிச்சூட்டை நடத்தியவர்கள் தொடர்பில் எந்தவித தகவல்களும் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## நீதிமன்ற அவமதிப்பு...

வழங்கும்படி கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழிகாட்டல் உத்தரவு பிறப்பித்திருக்கின்றது.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை இடை நிறுத்தும்படி உத்தரவிடக் கோரி அகிலன் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ரிட் மனுவை, எதிர்த்தரப்பு முன்னிலையாகாத நிலையில் விசாரித்த கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம், அண்மையில் அந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணையை இடைநிறுத்தி இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருந்தது.

இந்த நிலையில் இந்த வழக்கு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசர் தாஹிர் லஸார் முன்னிலையில் இன்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் அகிலன் சார்பில் சட்டத்தரணிகள் றொனால்ட் பெரேரா, துஷித் ஜோன்தாஸ் ஆகியோரும், எதிராளியான சுமந்திரன் சார்பில் சட்டத்தரணி நிரான் அங்கிட்டலும், மூல மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜிப்ரி அழகரட்ணம், சட்டத்தரணி லூயி கணேசநாதன் ஆகியோரும் முன்னிலையாகினர்.

இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை திருகோணமலை மாவட்ட நீதிபதி முன்னிலையில் அல்லாமல் பிறிதொரு நீதிபதி முன்னிலைக்கு மாற்ற வேண்டும் என்ற மனுதாரர் கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கவில்லை.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விசாரணை தொடர்பில் வழக்குத் தொடரான சுமந்திரன் தரப்பு, இவ்விடயத்தில் புதிதாக சாட்சியங்கள் எதையும் சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஏதும் தங்களுக்கு இல்லை எனவும் –

மேற்படி சர்ச்சைக்குரிய செய்தியின் பொறுப்பாளரும் பிரசுரிப்பாளரும் தாமே என அகிலன் முத்துக்குமாரசாமி நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அதற்கு மேல் சாட்சியங்கள் எதையும் முன்னிலைப்படுத்திய வேண்டிய தேவை தங்களுக்கு எழவில்லை எனவும் –

அதனால், எதிர்த்தரப்பின் சம்மதத்துடனேயே இந்த விடயத்தின் விசாரணையை எழுத்து மூல சமர்ப்பணங்களுடன் முடிக்க திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது எனவும் – சுட்டிக்காட்டினர்.

ஆயினும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அகிலன் தரப்பு, சாட்சியங்களை முன்னிலைப்படுத்த விரும்பினால் அதனை ஆட்சேபிக்க மாட்டோம் எனவும் சுமந்திரன் தரப்பு இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்தது.

அதனை ஏற்றுக் கொண்ட நீதியரசர் வழக்கில் அகிலன் தரப்பு சாட்சியங்களை சமர்ப்பிக்க விரும்பினால் அதற்கு இடமளித்து, நீதிமன்ற அவமதிப்பு விவகார விசாரணையை முன்னெடுக்கும்படி திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்திற்கு கட்டளை பிறப்பித்தது.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் மேற்படி அவதூறு வழக்கு விசாரணையை முன்னெடுப்பதற்கு எதிராக முன்னர் பிறப்பிக்கப்பட்டுருந்த இடைக்காலத் தடை உத்தரவும் முடிவுறுத்தப்பட்டது.

## தேசபந்து...

கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட 8 தரப்பினர் தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணைகளுக்கு அனுமதியளித்து இன்று இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

மனு மீதான விசாரணை முடிவுறும் வரை செல்லுபடியாகும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட, மஹிந்த சமயவர்தன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோரைக் கொண்ட நீதியரசர் குழாம் முன்னிலையில் குறித்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மனு மீதான விசாரணை 6 நாட்கள் நடைபெற்றதுடன் கடந்த வியாழக்கிழமை விசாரணை சுமார் 8 மணித்தியாலங்களுக்கு நீடித்தது.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ, ஜனாதிபதி சட்டத்தரணி ஷமில் பெரேரா, ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி விரான் கொரயா, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, சட்டத்தரணி திஷ்ய வேரகொட உள்ளிட்ட சட்டத்தரணிகள் மன்றில் விடயங்களைச் சமர்ப்பித்தனர்.

பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பரிந்துரைக்கப்பட்ட தேசபந்து தென்னக்கோனின் நியமனம் அரசமைப்பு பேரவையால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை என்று மனுதாரர்கள் தமது மனுக்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தகைய சூழலில் அவரை அந்தப் பொறுப்பில் அமர்த்த ஜனாதிபதி எடுத்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என்றும் மனுதாரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அதன் காரணமாக குறித்த நியமனத்தைச் செல்லுபடியற்றதாக்கும்படி உத்தரவிடுமாறு மனுக்களின் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்களில் சபாநாயகர் உள்ளிட்ட அரசமைப்பு பேரவையின் அங்கத்தவர்கள், தேசபந்து தென்னக்கோன், சட்டமா அதிபர் உள்ளிட்டவர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## ஐஸ் போதைப்பொருளுடன்...

அம்பாறை மாவட்டம், கல்முனை புறநகர் பகுதியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகள் கடற்கரைப் பகுதிகளில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய 3 நபர்களை ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்ததுடன் கல்முனை தலைமையகப் பொலிஸாரிடம் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைத்தனர்.

கைதானவர்கள் 21, 26, 28 வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன் 520 மில்லிகிராம், 980 மில்லிகிராம், 530 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருட்கள் சந்தேகநபர்கள் வசம் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஏற்கனவே போதைப்பொருள் நுகர்தல் மற்றும் விற்பனை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ரிவோல்டர் ரக...

துப்பாக்கி மீட்கப்பட்டு நேற்று மாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த துப்பாக்கி 2 தோட்டாக்களுடன் (ரிவோல்வர்) இயங்கு நிலையில் காணப்படுவதுடன் ஜேர்மனி நாட்டுத் தயாரிப்பில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும் மீட்கப்பட்ட துப்பாக்கி தொடர்பில் எந்தவொரு சந்தேகநபர்களும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் மேலதிக விசாரணைகளைக் கல்முனை தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சவுக்கடி உத்தரவு

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி இருக்கும் சமயத்தில் - அது பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிடத் தயாரான வேளையில் - மிக முக்கியமான உத்தரவு ஒன்றை அதிரடியாக வழங்கியிருக்கின்றது உயர் நீதிமன்றம்.

சர்ச்சைக்குரியவரான தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக செயல்படுவதற்குத் தடைவிதித்து உயர்நீதிமன்றம் இன்று வழங்கியிருக்கும் இடைக்கால உத்தரவு பல செய்திகளை - பாடங்களை - சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு வழங்கி இருப்பது அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்றமையை ஆட்சேபித்து - அதற்கு எதிராக உத்தரவிட கோரி - தாக்கல் செய்யப்பட்டிருந்த ஒன்பது அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்கும் முடிவை இன்று அறிவித்த உயர்நீதிமன்றம், வழக்கின் இறுதி விசாரணை முடிந்து தீர்ப்பு வெளியாகும் வரை பொலிஸ்மா அதிபர் பதவியில் தேசபந்து தென்னக்கோன் தொடர முடியாது என்று தடை விதித்திருக்கின்றது.

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பாக தேசபந்து தென்னக்கோனின் பெயரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரை செய்த போதிலும், அதற்கு மாறான - எதிரான - முடிவையே அரசமைப்பு கவுன்ஸில் எடுத்தது. ஆனால் அரசமைப்பு கவுன்ஸிலின் அந்த முடிவை தவறாகத் திரித்து, வேறு அர்த்தப்படுத்தி, சபாநாயகர் செய்த தப்பிலித்தனத்தைப் பயன்படுத்தி, அரசமைப்பு கவுன்ஸிலின் தீர்மானத்திற்கு மாறாக தேசபந்து தென்னக்கோனை அவசர அவசரமாக பொலிஸ்மா அதிபராக நியமித்துத் தவறிழைத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இந்த விடயத்தை ஒட்டி இப்போது உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கும் இடைக்கால உத்தரவு சில அனுபவங்களை - படிப்பினைகளை - தந்து நிற்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

✦ தவறான முறைமையின் கீழ் தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராகப் பதவியேற்றுள்ளார் என்பது நாட்டு மக்கள் அனைவருக்கும் பகிரங்கமாக - அப்பட்டமாக - தெரிந்த விடயம். அதற்கு எதிராக கொழும்பு பேராயர் உட்பட பல முக்கிய பிரமுகர்களினால் 9 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டும் கூட அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்கவும், இடைக்காலத் தடை விதிக்கவும் ஆறு மாத காலம் சென்று விட்டது. வெளிப்படையாக தவறு என்று தெரிந்த ஒரு பெரிய விடயத்துக்கு - நாட்டின் காவல்துறையின் தலைவரை நியமிப்பது போன்ற முக்கிய விவகாரத்துக்கு - நீதி செய்வதற்கும், நாட்டின் நீதி முறைமை காலத்தை இழுத்தடித்து நொண்டு போக்கே தொடர்கின்றது.

இந்த நியமனம் வழங்கப்பட்ட போதே இது தவறு என்று வெளிப்படையாக இப்பத்தியில் சுட்டிக்காட்டி, சில சமயம் இந்தப் பெரும் தவறுக்கு இலங்கை நீதித்துறை நிவாரணம் செய்ய முயலும் போது தேசபந்து தென்னக்கோன் பெரும்பாலும் சேவையில் இருந்து ஓய்வு பெற்று சென்றிருக்க கூடும் என்று எதிர்வு கூறி இருந்தோம். அவ்வளவு தாமதமாகத்தான் செயல்படுகின்றது இலங்கையின் நீதித்துறை.

✦ அரசமைப்பு கவுன்ஸிலின் தீர்மானத்தைத் தூக்கி எறிந்து, எதேச்சாதிகாரமாக நடந்த சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் உரிய சமயத்தில் - உரிய முறையில் - குட்டுப்போட்டு, சட்டத்தை சுட்டிக் காட்டி இருக்கின்றது உயர்நீதிமன்றம் என்றே இந்த இடைக்கால உத்தரவைக் கருத வேண்டி இருக்கின்றது.

✦ தற்போதைய சபாநாயகர் இது போன்று பல விடயங்களில் நீதி முறைமைகளுக்கு மாறாகச் செயற்பட்டமை மூலம் சபாநாயகர் பதவிக்கு கறுப்பு மறுவை ஏற்படுத்திச் செல்கின்றார் என்பது உறுதியாக உரைக்கப்பட்டிருக்கின்றது.

✦ தற்போதைய ஜனாதிபதிப் பதவிக் காலத்தின் அந்தத்தில் நிற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்த இடைக்கால உத்தரவின் பின்னராவது அரசமைப்பு கவுன்ஸிலின் தனித்துவம், சுயாதிபத்தியம் ஆகியவற்றை மதித்து நடக்க முன்வர வேண்டும்.

✦ 'தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதியாகிவிடும்' என்ற சட்ட அடிப்படைக் கோட்பாட்டை அடிப்படை உரிமை மீறல் வழக்குகளிலாவது இனிமேல் விசேட கவனம் எடுத்து முன்னெடுப்பதில் உயர்நீதிமன்றம் அதீத சிரத்தை காட்ட வேண்டும் என்பதை இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.




## பங்களாதேஷ் மாணவர் போராட்டம்:

# தொடரும் வன்முறை!

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

தற்போது வங்கதேசம் வன்முறைகளால் பற்றி எரிகிறது. இந்தப் பரபரப்புக்கு எல்லாம் காரணம், மாணவர் உரிமைப் போராட்டமே ஆகும். மாணவர் போராட்டத்தால் வெடித்த தாக்குதலும், இதைத் தொடர்ந்த வன்முறையுமே முக்கிய காரணங்கள்.

தென்னாசிய பொருளாதர வளர்ச்சியில் இந்தியாவுக்கு மேலாக உயர்ந்து வரும் வங்கதேசத்தின் ஒவ்வொரு நகரிலும், ஒவ்வொரு வீதியிலும் கொழுந்து விட்டு எரிகிறது கலவர நெருப்பு.

### மாணவர் தீவிர போராட்டம்

வங்கதேசம் பெருமைகளுடன் திகழும் இந்த மக்களாட்சி நாடு, தற்போது பற்றி எரிந்து வருகிறது. இயற்கையின் பெரும் வளங்களையும் வீர தீரம் மிக்க வரலாறையும் தன்னகத்தே கொண்டுள்ள தெற்காசிய நாடு.

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, தனி நாடாக இயங்கியது பாகிஸ்தான். மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் என்று சொல் வழக்கில் அறியப்பட்டது. அப்போது, கிழக்கு பாகிஸ்தான் முழுவதும் வங்க மொழி பேசும் மக்களே வசித்தனர்.

ஆனால், இந்தப் பகுதியை பாகிஸ்தான் அரசு புறக்கணித்தது. தேர்தல் முடிவுகளிலும் குளறுபடிகளைச் செய்தது. இதனால் பாகிஸ்தான் அரசுக்கு எதிராகத் தொடங்கிய கிளர்ச்சி, விடுதலைப் போராக மாறியது.

இந்தப் போராட்டத்தை ஆதரித்தது இந்திரா காந்தி தலைமையிலான இந்திய அரசு. விடுதலைப் போருக்காக படைகளை அனுப்பியது. 1971 டிசெம்பர் 16 இல் இந்தியா மற்றும் முக்தி - பாஹினி கூட்டுப் படைகளின் முன்பு சரணடைந்தார் பாகிஸ்தான் ராணுவ ஜெனரல். இந்தப் போரின் முடிவு, வங்கதேசம் என்ற புதிய தேசம் உருவாக வழிவகுத்தது.

1971 இல் இனி கிழக்கு பாகிஸ்தான் அல்ல, சுதந்திர வங்கதேசம் என இன்றைய பங்களாதேஷ் விடுதலை அடைந்தது. இந்திய வரைபடத்தில் பார்த்தால், இந்தியாவுடன் சேர்ந்தே இருக்கும் ஒரு மாநிலம் போலவே தெரியும். மேற்கு வங்கம் என்ற மாநிலத்தின் பெயரே, வங்கப் பிரிவினையின் பின்னர் பங்களாதேஷ் விடுதலை பெற்றது வரலாறு.

இந்தப் போரில் 5 லட்சம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என கணக்கிடப்பட்டது. ஏராளமானோர் காணாமல் போயினர். விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தோரின் தியாகத்தைப் போற்றும் விதமாக, அவர்களின் சந்ததிகளுக்கு வேலைவாய்ப்பில் 30 வீத இடஒதுக்கீடு வழங்கியது வங்கதேசம் அரசு. பின்னர் 2018 இல் வெடித்த மாணவர்கள் புரட்சியின் காரணமாக, இந்த இட ஒதுக்கீட்டு முறை ரத்து செய்யப்பட்டது.

### இட ஒதுக்கீடு அறிவிப்பும் எதிர்ப்பும்

தற்போது வங்கதேசத்தில் ஆட்சியில் இருக்கும் அவாமி லீக் கட்சி, விடுதலை வீரர்களின் சந்ததிகளுக்கு 30 வீத இட ஒதுக்கீடு வழங்குவதென முடிவு செய்துள்ளது. இதை எதிர்த்து, தொடரப்பட்ட வழக்கில், தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது அந்த நாட்டு உச்சநீதி மன்றம்.



இந்த நிலையில்தான், இட ஒதுக்கீட்டு முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து தன்னெழுச்சியாக போராட்டங்களில் குதித்துள்ளனர் மாணவர்கள். இவர்களை, ஆளுங்கட்சியின் மாணவர் அமைப்பான பங்களாதேஷ் சத்ரா லீக் அமைப்பினர், தாக்கி வருகின்றனர். போராட்டத்தை முடக்கும் விதமாக, அவர்கள் தாக்கு

தொடர்ச்சி▼



# தொடரும் வன்முறை!

தொடர்ச்சி▲

தல் நடத்தி வருவதால், வன்முறைக் களமாகியுள்ளது வங்கதேச வீதிகள்.

தலைநகர் டாக்கா மட்டுமல்ல, ராஜ்ஷாஹி, குல்னா, சட்டோக்ரம் உள்ளிட்ட ஒவ்வொரு நகருமே வன்முறைகளால் வதைபட்டு வருகின்றன. இதுவரை மாணாக்கர் 67 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 700 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

### வங்கதேச அரசின் நிலை

பங்களாதேஷில் இப்போது மிகப் பெரிய வன்முறை ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவி வருகிறது. கடந்த 2018 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு ரத்து செய்யப்பட்ட நிலையில், அப்படி ரத்து செய்யப்பட்டது செல்லாது என்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு 30 சதவீத இட ஒதுக்கீட்டை மீண்டும் வழங்க வேண்டும் என்றும் கடந்த ஜூன் 5 ஆம் திகதி அந்த நாட்டின் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதுவே மாணவர்களின் போராட்டத்துக்குக் காரணமாகும்.

பங்களாதேஷில் சமீப காலமாக வேலை வாய்ப்பின்மை அதிகரித்து வரும் நிலையில், அரசு வேலைகளில் இந்த இட ஒதுக்கீடு வழங்கக் கூடாது என்றே போராட்டம் நடந்து வருகிறது. கடந்த சில நாள்களுக்கு முன்பு நடந்த போராட்டத்தில் ஆளும் தரப்பினர் திடீரென தாக்கியுள்ளனர். இதில் பலர் காயமடைந்தனர்.

பங்களாதேஷ் முழுவதும் உள்ள அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் ஒதுக்கீட்டு முறையில் சீர்திருத்தம் கோரி வருகின்றனர். தாங்கள் எந்த அரசியல் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் இல்லை என்றும் அனைவருக்கும் நியாயமான தகுதி அடிப்படையில் வேலை கிடைக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இதை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களை மாணவர்கள் நடத்தி வரும் நிலையில், டாக்கா பல்கலைக்கழகம் மற்றும் சிட்டகாங் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மாணவர்கள் உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

### வங்க தந்தை முஜிபுர் ரெஹ்மான்

பங்களாதேஷின் தந்தை என அறியப்படும் ஷேக் முஜிபுர் ரெஹ்மான் 1972 ஆம் ஆண்டில் ஒரு இட ஒதுக்கீட்டு முறையை அறிமுகப்படுத்தினார். 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் இருந்து சுதந்திரப் போரில் போராடியவர்களின் குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளுக்கு அரசு வேலைகளில் இட ஒதுக்கீட்டை வழங்கினார்.

அதன்படி முதல் மற்றும் இரண்டாம் வகுப்பு அரசு வேலைகளில் 44 வீதம் பொது பிரிவினருக்கு நிரப்பப்படும். மீதமுள்ள 56 வீதம் குறிப்பிட்ட சமூகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. சுதந்திரப் போராட்ட வீரர்களின் குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளுக்கு 30 வீதம் ஒதுக்கப்படுகிறது.

மேலும், பெண்களுக்கு 10 வீதம், பின்தங்கிய மாவட் டங்களைச் சேர்ந்தவர்களுக்கு 10 வீத ஒதுக்கீடு, சிறுபான்மை இன மக்களுக்கு 5 வீதம், மாற்றுத்திறனாளிகளுக்கு 1 வீதம் ஒதுக்கப்படுகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் 30 வீத இட ஒதுக்கீட்டை ரத்து செய்ய வேண்டும் என்று போராட்டக்காரர்களின் கோரிக்கையாக உள்ளது. அதேநேரம் இன சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு இட ஒதுக்கீட்டை அவர்கள் எதிர்க்கவில்லை.

### மாணவர் குரல் அடக்கப்படுகிறதா?

இந்த வாரம், தலைநகர் டாக்கா உட்பட பல வங்கதேச நகரங்களில், ஒதுக்கீட்டு எதிர்ப்பு இயக்கத்தின் ஆதரவாளர்களுக்கும், குறிப்பாக பங்களாதேஷ் சத்ரா லீக் என அழைக்கப்படும் ஆளும் கட்சியான அவாமி லீக்கின் மாணவர் பிரிவினருக்கும், அவர்களை எதிர்ப்பவர்களுக்கும் இடையே மோதல்கள் நடந்தேறின.

பங்களாதேஷ் பிரதமராக இருக்கும் ஹசீனாவை "ரசாகர்கள்" என்று குறிப்பிட்டு விமர்சித்துள்ளார். இதனால் ஆளும் தரப்பைச் சேர்ந்த மற்ற கட்சித் தலைவர்களும் அமைச்சர்களும் போராட்டக்காரர்களைத் தேச விரோதிகள் என்று சாடி வருகின்றனர்.

பங்களாதேஷில் 1971 போரில் பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருந்தவர்களை ரசாகர்கள் என்று குறிப்பிடுவார்கள். அதை வைத்தே இட ஒதுக்கீட்டுக்கு எதிராகப் போராடும் மாணவர்களை பங்களாதேஷ் பிரதமர் விமர்சித்துள்ளார்.

பொதுச் சொத்துக்கள் தீக்கிரையாகி வருகின்றன. இதுபற்றி கருத்து தெரிவித்துள்ள வங்கதேச பிரதமர் ஷேக் ஹஸினா, "வீட்டையும் குடும்பத்தையும் மறந்து நாட்டுக்காக உயிர் நீத்தவர்களின் பிள்ளைகளை அரசு ஆதரிப்பதும் கௌரவிப்பதும் அவசியம்" என்று குறிப்பிட்டுள்ளார்.



# ஆடி அமாவாசையை முன்னிட்டு மாமங்கேஸ்வரரில் சிரமதானம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு அமிர்தகளி ஸ்ரீ மாமங்கேஸ்வரர் ஆலயத்தில் ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு சிரமதானப்பணிகள் இடம்பெற்றுள்ளன.

மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வி.வாசுதேவனின் வழிகாட்டலில் உதவிப் பிரதேச செயலாளர் சுபா சதாகரன் தலைமையில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் ஆலய வளாகத்தைத் துப்பரவு செய்யும் சிரமதான பணி நேற்று செவ்வாய்க்கிழமை (23) முன்னெடுக்கப்பட்டது.

அமிர்தகளி, மாமாங்கம், கூளாவடி, புன்னச் சோலை ஆகிய நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் செயல்பட்டு வரும் சமுர்த்தி சங்கங்கள், மாதர் சங்கங்களின் உறுப்பினர்களால் இந்தச் சிரமதான பணி முன்னெடுக்கப்பட்டது.







# அரச, தனியார் நிறுவனங்களின் கிரிக்கெட்; அக்கரைப்பற்று வைத்தியசாலை சம்பியன்!

(சியாத் எம். இஸ்மாயில்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தால் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பங்குகொள்ளும் உத்தியோகதர்களுக்கிடையிலான இனநல்லுறவை மேம்படுத்தும் மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்ஷார் வழிகாட்டுதலில் பொது விளையாட்டு மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (23) திகதி நடைபெற்றது.

இறுதிப் போட்டிக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அணியும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அணியும் தெரிவு செய்யப்பட்டிருந்தன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அணியினர் நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 73 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வீதி அபிவிருத்தி அதிகார சபை அணியினர் 5 ஓவர்களில் 30 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. தொடரின் சம்பியனாக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அணியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம மற்றும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ஐ.எம். ஜவாஹிர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய முகாமையாளர் ரீ.சிவசுப்ரமணியம், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச். பி. அனீஸ், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை பொது சுகாதார பொறுப்பு வைத்தியர் டாக்டர். எப்.எம்.காதர், பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் வை. ராசித் யஹ்யா, கணக்காளர் அப்துல் றகுமான், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எம். தமீம், நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ். பாறூக் மற்றும் உரிய திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.



# கல்முனை றோயல் வித்தியாலய சுற்றுமதில் நிர்மாணத்துக்கு நிதி!

(மாளிகைக்காடு)

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான எச். எம். முகம்மட் ஹரீஸின் முயற்சியின் பயனாக டி-100 வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் கல்முனை றோயல் வித்தியாலயத்துக்கு சுற்றுமதில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

சுற்றுமதில் நிர்மாணப்பணி வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (23) இடம்பெற்றது.

கல்முனை றோயல் வித்தியாலய அதிபர் எம்.எச்.எம். அன்சார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல் நட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.ஏ. கலீல் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாபா, இணைப்பு செயலாளர் சப்ராஸ் நிலாம், வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர், ஊடக செயலாளர் ரியாத் ஏ மஜீத், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை சிறுவர் இல்லத்தை மேம்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு !





(மாளிகைக்காடு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒரே ஒரு சிறுவர் இல்லமான சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்லத்தை மேம்படுத்தி நவீன முறையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான எச். எம். முகம்மட் ஹரீஸ் டி-100 வேலைத் திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் நான்கு மில்லியன் ரூபாவை இதற்கு ஒதுக்கியுள்ளார்.

சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்ல நிர்வாகிகளின் அழைப்பின் பேரில் எச்.எம். முகம்மட் ஹரீஸ் எம்.பி. நேரடியாக அந்தச் சிறுவர் இல்லத்துக்கு விஜயம் செய்து அங்கிருக்கும் சிறுவர்களுடனும் நிர்வாகிகளிடமும் கலந்துரையாடினார். இதன்போது தனது நிதி ஒதுக்கீட்டுக்கான ஆவணத்தை நிர்வாகத்திடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை சிறுவர் நிலைய பொறுப்பதிகாரி எம்.சி.எம். சிப்கான், நாடாளுமன்ற உறுப்பினரின் வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹுதா உமர் உட்பட சம்மாந்துறை அல் ஸலாம் சிறுவர் இல்ல முகாமைத்துவ குழுவினர், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் திறந்துவைப்பு

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள இறக்காமம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், செந்நெல் கிராமம் பிரதேச வைத்தியசாலை மற்றும் மாவடிப்பள்ளி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு ஆகியவற்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் நேற்று திங்கட்கிழமை (22) உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அழைப்பின் பேரில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நிகழ்வுகளில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சுகாதார ராஜாங்க முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் என். சிவலிங்கம், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டீ. ஜி.எம்.கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் உள்ளிட்ட பிராந்திய பிரிவுத் தலைவர்கள், திணைக்களத் தலைவர்கள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் சுகாதார ராஜாங்க அமைச்சராக இருந்த காலப் பகுதியில் குறித்த நிறுனங்களில் கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.









# சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய மூன்று மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல் நடல்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல்- ஹிலால் வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள புதிய மூன்று மாடி வகுப்பறைக் கடட்டம் மற்றும் பெட்மிண்டன் பயிற்சி நிலையத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று (23) செவ்வாய்க்கிழமை பாடசாலையில் இடம்பெற்றது.



திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸின் முயற்சியால் நாடாளுமன்ற உறுப்பினரின் டி-100 வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் பேண்ட் வாத்தியம் முழங்க, சிரேஷ்ட அண்ணாவியார் கலாபூஷணம் ஏ. இஸ்ஸதீன் தலைமையிலான பாரம்பரியக் கலையான பாடசாலையின்பொல்லடி மாணவக்குழுவினரின் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டு, அதிதிகள் வரவேற்கப்பட்டனர்.

வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து அடிக்கல் நட்டு வைத்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், அம்பாறை மாவட்ட பொறியியலாளர் ஏ. எம். சாஹிர், கல்முனை வலயக்கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான யூ.எல். றியால், எம்.எம். முதர்ரிஸ், அஸ்மா மலிக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிர், நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ. வாவா, பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத் உட்பட அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரிய, ஆசிரியைகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.








# அகில இலங்கை சாதனை மாணவனுக்கு வரவேற்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் சாதனை படைத்த முத்துஐயங்கட்டு ஜெ. விதுசனுக்கு பிரதேச மக்கள் மகத்தான வரவேற்பு அளித்துள்ளனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியில் முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தைச் சேர்ந்த முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவன் ஜெ. விதுசன் சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு தியகம விளையாட்டரங்கில் நடைபெற்ற கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியின் ஒரு அங்கமான 18 வயது ஆண்களுக்கான 3000 மீற்றர் நெடுந்தூர ஓட்டப் போட்டியை 9 நிமிடங்களில் கடந்து முதலாம் இடத்தை பெற்று தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்து சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது சாதனையைப் பாராட்டி பிரதேச வாசிகள் அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவப்படுத்தினர்.

# காணியற்றவர்களுக்கு அரச காணிகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## அரச அதிபர் கனகேஸ்வரன் தெரிவிப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரிலுள்ள அரச காணிகளின் விவரங்களை ஜனாதிபதி கேட்டுள்ளமையால் அவை ஜனாதிபதிக்கு (22) அனுப்பி வைக்கப்பட இருக்கின்றன. இதில் உங்கள் பிரச்சினையான இலுப்பைக்கடவை சோழமண்டல அரச காணி சம்பந்தமாகவும் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் கே.கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

இலுப்பைக்கடவை சோழமண்டல அரச காணியில் பணம் படைத்தவரும் வெளிநாட்டவரும் அத்துமீறிய செயல்பாட்டைக் கண்டித்து மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்று திங்கள்கிழமை (22) கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள், இது தொடர்பாக அரச அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

இதன்போது அரச அதிபருடன் உரையாடியபோதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவிக்கையில்,

நான் அரச அதிபராகப் பொறுப்பேற்ற பின் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ள ஒரு விடயமாக இந்த காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு கீழுள்ள காணி (எல்ஆர்சீ) தொடர்பாக கவனத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இது தொடர்பாக கவனத்தில் எடுக்கப்பட்டிருந்த போது மக்களாலும் குறிப்பிடப்பட்டிருந்த மேட்டு நிலக் காணிகள் கைப்பற்றப்பட்டுள்ளதால் அவற்றையும் கணக்கிடப்பட்டே இங்கு அரசக் காணிகளின் கணக்கீடு செய்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமை மன்னார் மாவட்டத்தில் பரவலாக காணப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தில் பலர் காணிகள் அற்ற நிலையில் காணப்படுகின்றனர்.

இவைகளை மீளப்பெற்று இவ்வாறானவர்களுக்கு இந்தக் காணிகளை பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய நிலமையும் உண்டு.



இது தொடர்பாக நாங்கள் கூடுதலான கவனத்தை எடுத்து வருகின்றோம். கடந்த மாதம் எமது மேன்மை தங்கிய ஜனாதிபதி மன்னாருக்கு வந்தபொழுது நீங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தை கவனத்துக்கு கொண்டு வந்தபொழுது இது தொடர்பான அறிக்கையை அனுப்பும்படி எங்களை பணித்துள்ளார்.

இதற்கான அறிக்கையை நாங்கள் அவருக்கு அனுப்புவதற்காக இருக்கின்றோம். மன்னாரில் பலர் காணியற்ற நிலையில் இருக்கும்போது வெளியிலிருந்து பணம் படைத்தவர்கள் வந்து இந்தக் காணிகளை கையடக்கி மேலும் அவர்கள் பணம் படைத்தவர்களாக இருக்க முயல்கின்றனர்.

இதை தொடரவிட முடியாது. இந்தக் காணிகளை காணியற்றவர்களுக்கு பிரித்து கொடுக்கும் நடவடிக்கையாகவே அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் செயற்படுகின்றோம்.

ஆகவே இப்பொழுது நீங்கள் முன்வைத்திருக்கும் உங்கள் காணி பிரச்சினைகளை உரிய இடங்களின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு உங்களுக்கு சாதகமான ஒரு நடவடிக்கையை நாங்கள் எடுக்க முயலுவோம்.- என்றார்.



# பிரான்ஸில் நடைபெற்றுள்ள கறுப்பு ஜூலைக் கவனவீர்ப்பு!

1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரம் இடம்பெற்று 41 ஆம் ஆண்டு நினைவாக பிரான்ஸில் நேற்று (23) செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, தமிழீழ மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு அகவணக்கத்தோடு ஆரம்பமானது.

தொடர்ந்து நினைவுரைகளைப் பிரான்சு தமிழர் ஒருங்கிணைப்புக் குழு செயற்பாட்டாளர் சத்தியதாசனும், பிரான்ஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு செயற்பாட்டாளர் ஜமாலும் கறுப்பு ஜூலையில் தமிழினத்துக்கு நேர்ந்த அவலம் தொடர்பில் தமிழ் மொழியில் நிகழ்த்தினர்.

அதேவேளை, நுவாசியல் தமிழ்ச் சோலை மற்றும் கிளிச்சி தமிழ்ச்சோலை மாணவியர் கறுப்பு ஜூலை தொடர்பில் பிரெஞ்சு மொழியில் உரையாற்றினர்.

துண்டுப் பிரசுரங்களை ஆர்ஜொந்தை தமிழ்ச்சோலை மாணவர் வழங்கியதுடன், பிரெஞ்சு மக்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்ததுடன் கறுப்பு ஜூலை பற்றி விளக்கியதை வழங்கினர்.

நிறைவாகத் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற தாரக மந்திரத்தோடு கவனவீர்ப்பு நிறைவுபெற்றது.








# இந்திய மத்திய பட்ஜெட்டில் பாரபட்சம் எனக் குற்றம் சுமத்தி நாடாளுமன்றில் இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம்

டெல்லி,ஜூலைப்24

இந்திய மத்திய பட்ஜெட்டில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவித்து நாடாளுமன்றத்தில் 'இண்டியா' கூட்டணி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தினர்.

இந்தியாவில் 2024-25 ஆம் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது. நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் பட்ஜெட்டை தாக்கல் செய்தார். மத்திய பட்ஜெட்டில் பல்வேறு துறைகளுக்கு பல அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

அதேவேளை, பா.ஜ.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் ஆளும் பீகார், ஆந்திராவுக்கு பட்ஜெட்டில் அதிக அறிவிப்புகள் இடம்பெற்றன.

இதனிடையே, பட்ஜெட்டில் பீகார், ஆந்திராவை தவிர மற்ற மாநிலங்களில் போதிய அறிவிப்புகள் வெளியாகவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. மேலும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் பட்ஜெட்டில் புறக்கணிக்கப்பட்டன எனவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்நிலையில், மத்திய பட்ஜெட்டில் பாரபட்சம் காட்டப்படுவதாக கூறி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணி எம்.பி.க்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். காங்கிரஸ், திமுக, ஆம் ஆத்மி, திரிணாமுல் காங்கிரஸ் உள்பட பல்வேறு எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பட்ஜெட்டில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக கூறி மாநிலங்களவையில் இருந்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வெளிநடப்பு செய்தனர்.

# பட்ஜெட்டில் எந்த மாநிலமும் புறக்கணிக்கப்படவேயில்லை

## நிர்மலா சீதாராமன் பதிலடி

புதுடெல்லி,ஜூலை24

பட்ஜெட்டில் மாநிலங்களின் பெயர்களை குறிப்பிடாததால், புறக்கணிப்பு என்று அர்த்தமில்லை என்று மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவை கூடியதும் எதிர்க்கட்சி தலைவர் கார்கே பேசும் போது, பட்ஜெட்டில் பாரபட்சம் காட்டப்பட்டு உள்ளது. மாநிலங்களுக்கு நியாயம் கிடைக்கவில்லை. அநீதி இழைக்கப்பட்டு உள்ளது. சில மாநிலங்களுக்கு அதிக நிதி வழங்கப்பட்டு உள்ளது. பல மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. இது நாற்காலியை காப்பாற்றும் பட்ஜெட் என்றார். இதன் பிறகு எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் வெளிநடப்பு செய்தனர்.

அப்போது மத்திய மந்திரி நிர்மலா சீதாராமன் பதில் அளித்தார்.

பட்ஜெட்டில் எந்த மாநிலத்தையும் புறக்கணிக்கவில்லை. எந்த பாரபட்சமும் காட்டவில்லை. எல்லா மாநிலங்களுக்கும் போதுமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனது பதிலுரையை கேட்காமல் எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்துள்ளனர். முந்தைய பட்ஜெட்டில் ஒவ்வொரு மாநிலமும் குறிப்பிடப்பட்டனவா? பட்ஜெட் உரையில் எல்லா மாநிலங்களின் பெயரையும் குறிப்பிட வாய்ப்பு கிடைப்பதில்லை. மாநிலங்களின் பெயரை குறிப்பிடவில்லை என்றால், அது புறக்கணிப்பு ஆகாது.

இடைக்கால பட்ஜெட், பொது பட்ஜெட்டில் மராட்டியம் பெயர் குறிப்பிடவில்லை. அங்கு ரூ.7 ஆயிரம் கோடி



மதிப்பில் மிகப்பெரிய துறைமுகம் அமைப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது. பல மாநிலங்களுக்கு பெயரை குறிப்பிடாமல் திட்டங்களுக்கு நிதி வழங்கப்படுகிறது. பட்ஜெட்டில் மாநிலங்களின் பெயரை குறிப்பிடாவிட்டாலும், திட்டங்களின் பலன்கள் மக்களை சென்றடையும்.

எதிர்க்கட்சிகள் திட்டமிட்டே மத்திய அரசு மீது குற்றம்சாட்டுகின்றன. மக்களைத் தவறாக வழிநடத்த காங்கிரஸ் கட்சி முயற்சி செய்கிறது. மேற்கு வங்காளத்தில், நிதி அளித்தும் மத்திய அரசின் திட்டங்களை அம்மாநில அரசு அமல்படுத்தவில்லை. பிரதமரின் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. - எனப் பதிலடி கொடுத்தார்.

மேலும் காங்கிரஸ் தாக்கல் செய்த பட்ஜெட்டுகளில் அனைத்து மாநிலங்களின் பெயரும் இடம் பெற்றிருந்தனவா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

# நேபாளத்தில் விமானம் விழுந்து எரிந்தது 18 பேர் பலி; விமானி மாத்திரமே மீட்பு!



காத்மாண்டு,ஜூலை24

நேபாளத்தின் காத்மாண்டு திரிபுவன் சர்வதேச விமான நிலையத்திலிருந்து இன்று காலையில் 19 பயணிகளுடன் ஒரு விமானம் புறப்பட்டது. விமானம் ஓடு வேகமாக சென்று மேலே எழும்ப முயன்றபோது (டேக் ஓவ்) திடீரென சறுக்கிய விமானம், விமான நிலையத்தை ஒட்டி உள்ள காலியிடத்தில் விழுந்து நொறுங்கியது. விழுந்த உடன் விமானம் தீப்பற்றி எரிந்தது. இதனால் விமான நிலையத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உடனடியாக மீட்புக் குழுவினர் விரைந்து சென்று தீயை அணைத்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். இந்த விபத்தில் 18 பேர் பலியாகினர். பலத்த காயங்களுடன் மீட்கப்பட்ட விமானி மட்டும், அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

விமானத்தில் அச்சமயம் தொழில்நுட்ப அலுவலர் உட்பட 19 பேர் இருந்தனர். விமானி மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டார்.

எரிந்து கொண்டிருந்த விமான சிதைவுகளில் இருந்து இதுவரை 5 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நேபாளத்தின் சவுர்யா விமான நிறுவனத்திற்கு சொந்தமான அந்த விமானம், பொக்காரா என்ற ரிசார்ட் நகருக்கு புறப்பட்டபோது விபத்துக்குள்ளாகியிருக்கிறது. விபத்தைத் தொடர்ந்து விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. மீட்பு பணி தொடர்பான வீடியோ வெளியாகி உள்ளது.

# மியான்மர் அதிபருக்கு சுகவீனம் அதிகாரங்கள் பிரதமரின் வசம்!



நேபிடா,ஜூலை24

மியான்மர் அதிபருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ள நிலையில் பிரதமரிடம் அதிகாரங்கள் தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மியான்மர் அதிபர் மைன்ட் ஸ்வே உடல்நலக்குறைவு காரணமாக ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். இதனால் அவரது அதிகாரங்கள் அனைத்தும் தற்காலிகமாக மியான்மர் பிரதமரும், தேசிய நிர்வாகக் கவுன்ஸில் தலைவருமான மின் ஆங் ஹ்லைங்குக்கு மாற்றப்பட்டுள்ளன.

அதிபர் மைன்ட் ஸ்வே சிகிச்சை முடிந்து வீடு திரும்பும் வரை மின் ஆங் தற்காலிக அதிபராக செயல்படுவார் எனவும், அவர் தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு கவுன்ஸில் தொடர்பான பணிகளை கவனிப்பார் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# அரிய வகை மீனினத்தைச் தேடிச் சென்றோரின் படகு கவிழ்ந்ததில் 8 பேர் பலி; 22 பேர் மாயம்!

ஸ்டான்லி,ஜூலை24


அரிய வகை மீனை தேடி ஆராய்ச்சியாளர்கள் சென்ற படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

அட்லாண்டிக் கடலின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள தீவுக்கூட்டம் போக்லாந்து தீவுகள். இந்த தீவுக்கூட்டத்தை இங்கிலாந்து நிர்வகித்து வரும் நிலையில் தீவுக்கூட்டம் தங்களுக்கு சொந்தமானது என்று ஆர்ஜெண்டினா கூறிவருகிறது. போக்லாந்து தீவில் சுமார் 3 ஆயிரத்து 800 பேர் வசித்து வருகின்றனர்.

இதனிடையே, அட்லாண்டிக் கடலின் போக்லாந்து தீவுப்பகுதியில் டூத்பிஷ் என்ற அரிய வகை மீன் காணப்படுகிறது.

இந்நிலையில், இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில் உள்ள செயிண்ட் ஹெலீனா தீவில் இருந்து ஆராய்ச்சியாளர்கள் உள்பட 30 பேர் அரிய வகை டூத்பிஷ் மீனை தேடி கடந்த திங்கட்கிழமை மீன்பிடி படகில் புறப்பட்டுள்ளனர்.

போக்லாந்து தீவில் இருந்து கடலில் 200 கடல் மைல் தொலைவில் சென்றுகொண்டிருந்தபோது மோசமான வானிலை காரணமாக படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும், 22 பேர் கடலில் மாயமாகினர்.



தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் மாயமான 22 பேரையும் தீவிரமாக தேடி வருகின்றனர். கடலில் விழுந்த எஞ்சிய 22 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

பக்கங்கள் - 5

# கனடா முரசு

புதன்கிழமை 24/07/2024

## டொறன்ரோ பகுதியில் தெளிவான வானிலை

டொறன்ரோவில் இந்த வார காலநிலை தொடர்பில் முன்னறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வார இறுதியில் தெளிவான வானிலை நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

C2 ▶




# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கனடிய நபருக்குத் தண்டனை

**அல்பேர்ட்டா, ஜூலை 24**

**இங்கிலாந்தில் எட்மன்டன் நபர் ஒருவருக்கு பயங்கரவாத சட்டத்தின் கீழ் பல குற்றச்சாட்டுகளில் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.**

**எட்மன்டன் நகர எரிபொருள் நிலைய ஊழியர் இங்கிலாந்தில் பயங்கரவாத குற்றச்சாட்டில் குற்றவாளி எனக் கண்டறியப்பட்டார்.**

பயங்கரவாதக் குற்றச்சாட்டில் கனடியப் பிரஜை காலித் ஹுசைன், பிரித்தானிய போதகர் அன்ஜம் சௌத்ரி ஆகியோர் நேற்று குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

2019ஆம் ஆண்டு கனேடிய தேசிய பொலிஸார் ஆரம்பித்த – தீவிரவாதத்துடன் தொடர்புடைய – விசாரணையில் காலித் ஹுசைன் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டார்.

இவரது செயல்பாடுகள் குறித்த விசாரணையில், அல் முகாஜிரோனின் மற்றொரு பெயரால் அறியப்படும் இஸ்லாமிய சிந்தனையாளர் சங்கத்தில் அவர் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததார் எனக் கூறப்படுகிறது.

# டொறன்ரோ நகரசபை உறுப்பினர் பதவி எவன் சாம்பசிவமும் தேர்தல் போட்டியில்!

**ஒன்ராரியோ, ஜூலை 24**

வெற்றிடமாக உள்ள டொறன்ரோ நகரசபை உறுப்பினர் பதவிக்கு கனடியத் தமிழர் ஒருவரும் போட்டியிடுகின்றார்.

டொன் வெலி மேற்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் நியமனங்கள் திங்கட்கிழமை ஆரம்பித்தது.

இதில் முதலாவது தினம் தமது பெயர்களை வேட்பாளராக பதிவு செய்தவர்களில் எவன் சாம்பசிவம் என்ற தமிழரும் அடங்குகிறார்.

இவர் முன்னரும் நகரசபை வேட்பாளராக போட்டியிட்டவராவார்.

நீண்ட கால நகர சபை உறுப்பினர் ஜே ரொபின்சன் புற்று நோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்ததை அடுத்து அவரது பதவி வெற்றிடமானது.

இந்த தொகுதியில்

C2 ▶





# கனடாவிலிருந்து அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடக்க படகில் புறப்பட்ட தம்பதியர்களுக்கு நேர்ந்த துயர முடிவு

அட்லாண்டிக் சமுத்திரத்தை படகில் கடப்பதற்காக சாகசப் பயணம் புறப்பட்ட ஒரு கனேடியரும் அவரது மனைவியும் கடந்த மாதம் மாயமானார்கள்.

கனேடியரான ப்ரெட்டும் (Brett Clibbery) பிரித்தானியரான அவரது மனைவியான சாராவும் (Sarah Packwood), காற்றை மாசுபடுத்தும் பெட்ரோல் முதலான எவ்வித எரிபொருளும் இல்லாமல், சூரியசக்தி, பேட்டரிகள் போன்றவற்றின் உதவியுடன் இயங்கும் படகொன்றில், அட்லாண்டிக் சமுத்திரத்தைக் கடப்பதற்காகப் பயணம் புறப்பட்டார்கள்.

ஆனால், கடந்த மாதம், அதாவது ஜுன் மாதம் 18ஆம் திகதி இருவரும் மாயமானார்கள்.

அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தெரியாத நிலையில், இம்மாதம், அதாவது, ஜுலை மாதம் 12ஆம் திகதி, கனடாவின் Nova Scotiaவுக்கு அருகே, Sable தீவில் அவர்கள் இருவரது உயிரற்ற உடல்களும் கரையொதுங்கின.

தம்பதியருக்கு என்ன நடந்தது என்பது தெரியாத நிலையில், அதைக் கண்டுபிடிப்பதற்காக கனேடிய பொலிஸார் விசாரணை ஒன்றைத் துவக்கியுள்ளார்கள்.

பிரெட்டும் சாராவும் தங்கள் படகை விட்டுவிட்டு உயிர் காக்கும் படகொன்றில் பயணித்துக் கொண்டிருக்கும்போது, அவ்வழியே வந்த பெரிய சரக்குக் கப்பல் ஏதாவது இவர்களுடைய சிறிய படகின்மீது மோதியிருக்கலாம் என்னும் கோணத்தில் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

பிரெட் தனது சகோதரிக்கு தனது சிறுநீரகங்களில் ஒன்றை தானம் செய்வதற்காக லண்டன் வந்தபோது லாராவை சந்தித்துள்ளார்.

இருவரும், இப்போது அவர்கள் பயணித்துவரும் படகிலேயே, கனடாவில் வைத்து திருமணம் செய்து கொண்டார்கள்.

ஆக, தம்பதியரின் வாழ்வையும் திருமணத்தையும் போல, அவர்களுடைய மரணமும் கடலிலேயே நிகழ்ந்துவிட்டது!

## டொறன்ரோ நகர சபை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடும் வேட்பாளர்கள் செப்ரம்பர் 19ஆம் திகதி வரை தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்யலாம்.

ஜுலை 23 காலை 6 மணிவரை இந்த இடைத் தேர்தலில் போட்டியிட மொத்தம் ஐந்து வேட்பாளர்கள் தமது பெயர்களை பதிவு செய்துள்ளனர்.

இந்த தொகுதிக்கான இடைத்தேர்தல் நவம்பர் 4ஆம் திகதி நடைபெறுகிறது.

இங்கு முன்கூட்டிய வாக்குப்பதிவு ஒக்டோபர் 26, 27ஆம் திகதிகளில் நடைபெறும்.

## டொறன்ரோ பகுதியில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், வார நாள்களில் மாறுபட்ட வானிலை நிலவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் இந்த வார கால நிலை...; Toronto Weather Storms Showers

சில சந்தர்ப்பங்களில் மேகக் கூட்டத்துடன் ஓரளவு பலத்த காற்று வீசும் என தெரிவிக்கப்படுகிறது.

மாலை அல்லது இரவு வேலைகளில் மழை பெய்யும் என தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நயகரா பகுதியில் கூடுதல் மழை வீழ்ச்சி பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது. வாரத்தின் நடுப்பகுதியில் கூடுதலாக மழை பெய்யும் சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஹெமில்டன் தீ விபத்தில் 11 பேர் காயமடைந்தனர்



**ஒன்ராரியோ, ஜுலை 24**

கனடாவில் இடம் பெற்ற தீ விபத்துச் சம்பவம் ஒன்றில் 11 பேர் காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் ஹெமில்டன் இடம்பெற்றுள்ளதாகவும், இந்த சம்பவத்தில் சுமார் 173 பேர் இடம் பெயர நேரிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹன்ட மற்றும் ஜாக்சன் வீதிகளுக்கு அருகாமையில் காணப்படும் வை.எம்.சி.ஏ. குடியிருப்புத் தொகுதியில் இந்தத் தீ விபத்து இடம் பெற்றுள்ளது.

கட்டடத்தின் இரண்டாம் மூன்றாம் மாடியில் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. தீ விபத்துக் காரணமாக கட்டடத்திற்குப் பாரியளவு சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


தீ விபத்துக் காரணமாகக் கட்டடத்தின் பல மாடிகளுக்கும் புகை பரவியதாகவும் இதனால் பலர் அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பெரும் எண்ணிக்கையிலானவர்கள் தீயணைப்பு பணியில் இணைந்து கொண்டிருந்தனர்.



# ஜெஸ்பர் தேசிய பூங்காவும் இப்போது காட்டுத்தீ வெளியேற்ற உத்தரவின் கீழ்

## பிரிட்டிஷ் கொலம்பியா நோக்கிச் செல்ல அறிவுறுத்தல்






**அல்பேர்ட்டா, ஜூலை 24**

ஜெஸ்பர் தேசிய பூங்கா காட்டுத்தீ வெளியேற்ற உத்தரவின் கீழ் உள்ளது.

மேற்கு அல்பேர்ட்டாவில் உள்ள தேசிய பூங்காவை அதிக வெப்பநிலை, காற்று அச்சுறுத்தும் வகையில் காட்டுத்தீயின் தீப்பிழம்புகளை தூண்டியது.

அல்பேர்ட்டா மாகாண அவசர வெளியேற்ற உத்தரவு எச்சரிக்கையில் ஜெஸ்பர் தேசிய பூங்காவும் உள்ளடங்கியுள்ளது

ஜெஸ்பர் தேசிய பூங்காவின் பார்வையாளர்கள், முகாம் வாசிகள், குடியிருப்பாளர்கள் திங்கட்கிழமை இரவு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

ஜெஸ்பர் தேசிய பூங்காவில் இருந்தவர்கள் பிரிட்டிஷ் கொலம்பியா நோக்கிச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது.

காட்டுத்தீ காரணமாக ஜெஸ்பர் நகராட்சியில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

# கொள்ளை, திருட்டுகளில் ஈடுபட்ட 18 நபர்கள் கைது

## பீல் பிராந்திய பொலிஸார் நடவடிக்கை




**ஒன்ராரியோ, ஜூலை 24**

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளில் 18 பேர் பீல் பிராந்திய பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீடு, வாகன கொள்ளையில் ஈடுபட்டவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் பிறம்டன், மிசிசாகா நகரில் இயங்கும் 'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் வலையமைப்புடன்' தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புறொஜெக்ட் வோர்லொக் என பெயரிடப்பட்ட ஆறு மாத விசாரணையின் விவரங்களை பொலிஸார் நேற்று வெளியிட்டனர்.




இந்த குற்றச்சாட்டுக்களில் ஆயுதமேந்திய கொள்ளைகள், வாகன திருட்டுகளும் அடங்குகின்றன.

இந்த விசாரணை தொடர்பாக மொத்தம் 150 குற்றச்சாட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனப் பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி நிஷ்சன் துரையப்பா தெரிவித்தார்.

சுமார் 1.2 மில்லியன் டொலர் பெறுமதியான 12 திருடப்பட்ட வாகனங்கள், 4 தடை செய்யப்பட்ட துப்பாக்கிகள், 55,000 டொலர் பெறுமதியான திருடப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரட் தெரிவித்துள்ளனர்.

# நியூசிலாந்தில் 4 தற்கொலைகளுக்கும் நஞ்சை கனடியரே விநியோகித்தாராம்!

**ஒன்ராரியோ, ஜூலை 24**

கனடிய பிரஜை ஒருவரினால் இணைய தளம் ஊடாக விற்பனை செய்யப்பட்ட நச்சுப் பொருட்களின் மூலம் இதுவரையில் 129 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நியூசிலாந்தில் இடம் பெற்ற நான்கு தற்கொலைச் சம்பவங்களுடனும் இந்தக் கனடியருக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவின் மிஸிஸாகா பகுதியைச் சேர்ந்த கெனத் லோவ் என்ற நபர் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் நச்சுப் பொருள்களை அனுப்பி தற்கொலை செய்து கொள்ள உதவினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் நியூஸிலாந்தில் நான்கு பேர் இந்த நபரிடம் உதவி பெற்றுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இந்த நபர் தற்கொலை செய்வதற்கு தேவையான நச்சுப் பொருள்களை வழங்கினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்படி கெனத்திடம், நச்சுப் பொருள்களைக் கொள்வனவு செய்து உலக அளவில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 129 ஆக அதிகரித்துள்ளது.

நியூசிலாந்தில் உயிரிழந்தவர்களில் 18 வயது சிறுமி ஒருவரும் உள்ளடங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இணைய வழியில் தொடர்பு கொண்டு இவ்வாறு நச்சு பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கெனத் என்பவர் இவ்வாறு பலரை தற்கொலை செய்து கொள்ள தூண்டினார் எனவும், நேரடியாகக் கொலைக்குப் பங்காற்றினார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நபருக்கு எதிராக கனடாவில் 14 நேரடிக் கொலை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.